# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1980/42 - 2016 අගෝස්තු මස 19 වැනි සිකුරාදා - 2016.08.19

*1980/42 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் , 2016.05.19 ஆந் திகதிய 1967/52 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் மேற்குறித்த கட்டளையின் கீழ் வெளியிடப்பட்ட அட்டவணையினை இதனகத்துப் பின்னர் உள்ளவாறான அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கின்றேன்.*

*ரவி கருணாநாயக்க,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 1,*
*2016, ஓகத்து 18.*

**அட்டவணை**

*2016.05.19 ஆந் திகதிய 1967/52 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தலிலுள்ள அட்டவணை I ( உ) என்ற விடயத்திற்கு உடனடுத்து கீழ்வரும் விடயங்களை புகுத்துவதன் மூலம் :-*

| இல.<br>I | | விடயம்<br>II | உற்பத்தி தீர்வை<br>III |
|---|---|---|---|
| 1 | (ஊ) | உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றின் கொள்வனவானது :<br>2015.10.14 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 22/99 (XXXI) மற்றும் அதனோடு தொடர்புபற்ற ஏனைய திருத்தங்கள் என்பனவற்றிற்கு அமைய, விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தினைப் பயன்படுத்தி, 2015.11.20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இளைப்பாறிய அரச உத்தியோகத்தர் ஒருவரினால் மேற்கொள்ளப்படின், | கிரயம், காப்புறுதி மற்றும் கிரயப் பெறுமதியின் (CIF) 40% |

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| இல. I | | விடயம் II | உற்பத்தி தீர்வை III |
|---|---|---|---|
| | (எ) | உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றின் கொள்வனவானது :<br>2016.06.24 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 22/99 (XXXII) மற்றும் அதனோடு தொடர்புபற்ற ஏனைய திருத்தங்கள் என்பனவற்றிற்கு அமைய, விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தினைப் பயன்படுத்தி, 2015.11.21 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இளைப்பாறிய அரச உத்தியோகத்தர் ஒருவரினால் மேற்கொள்ளப்படின், | செலுத்த வேண்டியுள்ள மொத்த உற்பத்தித் தீர்வையின் 20% |
| | (ஏ) | உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றின் கொள்வனவானது :<br>2016.07.14 ஆந் திகதிய வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல. 01/2016 இற்கேற்ப, விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தினைப் பயன்படுத்தி அரச உத்தியோகத்தர் ஒருவரினால் இறக்குமதி செய்யப்பட்டிருப்பின், | செலுத்த வேண்டியுள்ள மொத்த உற்பத்தித் தீர்வையின் 50% |

9-266

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.